# ‘‘தோத்திரம் புகழ் கீர்த்தனம்’’

## பொருளறிந்து பாடுவோம்

**மரியான் உபதேசியர்** எழுதியருளியுள்ள ‘‘தோத்திரம் புகழ் கீர்த்தனம்’’ என்ற பாடலின் பொருளையும் எழுதியவர் வரலாற்றையும், பண் வரலாற்றையும் இதில் அறிய உள்ளோம்.

‘‘வணக்கமும் போற்றியும் அழகு நிறை வெற்றியும் என்றும் உமக்குரியன. கிறிஸ்துவே உம்மை வாழ்த்திடத் தீமையை வெல்லும் அருளினை எமக்குச் சூட்டுவீராக’’.

‘‘நீர் இனங்களுக்கெல்லாம் உயர்ந்த யூத இனத்தைச் சேர்ந்தவர். நல் மன்னர், இறைக்குழந்தை, மனிதரில் சிறந்தவர், மறை நூலின் இருப்பிடம், செங்கோலினைத் தாங்கி நடுநிலை மாறாது உதவுபவர்’’.

‘‘இத்துணைச் சிறப்புப் பொருந்திய நீர், என்னை மீட்பதற்காக இந்த உலகினில் வந்து நல் மனிதராகப் பிறந்தீர். எனக்காகவே சிறுமை ஏற்று மறைதனை உயர்வாக ஏற்றி எனை ஆற்றினீர். நன்மொழி கொண்டு எனைத் தேற்றினீர். எனக்காக ஏளனங்கள் அடைந்தீர். உம் உதிரத்தையே எனக்காகச் சிந்தினீர். அதில் உள்ள பரிவுதான் என்னே! இறை நீதியை நிலைநாட்டிய நல் ஆசிரியராக பாவம் புரிந்த மானிடர்க்கு இரங்கினீரே. நடுவராக நின்றீரே. தீமை எல்லாவற்றையும் கொண்டு தீயோனை வென்று வாகை சூடினீரே என்றென்றும் வணக்கமும் போற்றியும் அழகுநிறை வெற்றியும் உமக்குரியன’’.

‘‘இறையே நீர் எனக்கு மெய்மொழியாக நற்செய்தியை விரிந்துரைக்க எனக்கு வரமருள்வீராக. அன்பார்ந்த கதிரொளியாம் ஆற்றலினால் எனக்கு நலமருள்வீராக. ஒவ்வொரு நாளும் இறையன்பில் என்னை நடத்தி அருள் கூர்ந்து என்னை நோக்குவீராக. உம் கைகளைக் கொண்டு அருள்மாலை எனக்குச் சூட்டி என் கவலையை அகற்றி என் துயரைத் தீர்ப்பீராக. இறையே என்பக்கத்தில் நிற்பீராக. நாள்தோறும் நலம் தரும் மொழிகள் உரைப்பீராக. தீயோனை வென்று தீமையைக் கொல்வீராக. நீரே தூயவர். உமக்கே என்றென்றும் வணக்கமும் போற்றியும் அழகு நிறை வெற்றியும் உரியன’’.